1

**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093692

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 05/2020 Date: நாள் 18.11.2020

2. (i) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102 Cr.P.C and
(ii) Act சட்டம்: P.C. Act (amendment) 2018 Sections பிரிவுகள்: 7, 7-A of PC Act 1988
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: as amended by the PC (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period நேர அளவு 17.11.2020 Time from : நேரம் முதல் 18.00 Hrs Time to : நேரம் வரை 21.30 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.11.2020 Time : நேரம் 02.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலம் (computer typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 4 km தெற்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.K.சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் த/பெ.கிருஷ்ணமூர்த்தி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியா (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட திணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. C. உமையாள், 58/2020, த/பெ. செட்டியார், மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலகம், நாகப்பட்டினம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
இல்லை

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து அனுப்பப்படுகிறது இன்று 18.11.2020-ம் தேதி 02.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்கள் அளித்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு அனுப்புநர், திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 17.11.2020-ம் தேதி மாலை 18.00 மணி முதல் 21.30 மணி வரை நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவர்களுக்கு சொந்தமான "It's mine" என்று மஞ்சள் நிறத்தில் எழுதப்பட்ட கருப்புகலர் ஹேண்ட் பேக்கில் தனித்தனியாக சுருட்டி சுருட்டி வைக்கப்பட்டிருந்த பணம் 2000 X 6 = 12,000, 500 X 57 = 28,500, 200 X 13 = 2,600, 100 X 14 =1,400 மொத்தம் ருபாய் 44,500/- பணம் இருந்தது பற்றி விசாரிக்க நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவர்கள் 11 வட்டார

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 18/11/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. ARULPRIYA
Rank: நிலை INSPECTOR, V&AC NAGAPATTINAM

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி** :-

ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூகநல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளிர் ஊர்நல அலுவலர்கள் ஆகியோர் 5 வகை திருமண நிதியுதவி திட்டத்திற்குரிய விண்ணப்பங்களை ஒப்புதல் செய்ய அவருக்காக கொடுத்த பணத்தை அப்படியே வாங்கி தனித்தனியாக சுருட்டி சுருட்டி வைத்திருப்பதாக சொன்னார். நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவர்கள் தொலைபேசி மூலம் இன்று 17.11.2020 ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு வரச்சொன்னதன் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு வந்த நாகப்பட்டினம் மாவட்ட 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூகநல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளிர் ஊர்நல அலுவலர்கள் பரிந்துரை செய்து கொடுத்த 5 வகை திருமண நிதியுதவி திட்டத்தின் விண்ணப்பங்களை நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள் பெற்று ஒப்புதல் வழங்க 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூகநல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளிர் ஊர்நல அலுவலர்களிடம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் மேற்படி பணம் ரூபாய் 44,500 யை திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்படி விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய். 44,500/- மற்றும் திருமதி.C.உமையாள் அவர்களுக்கு சொந்தமான "It's mine" என்று மஞ்சள் நிறத்தில் எழுதப்பட்ட கருப்புகலர் ஹேண்ட் பேக், நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகப் பணியாளர்களின் வருகை பதிவேடு 2020, நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலக ஒப்பந்தப் பணியாளர்களின் வருகை பதிவேடு 2020, மாவட்ட சமூகநல அலுவலக கூட்ட நடவடிக்கை பதிவேடு ஆகிய ஆவணங்கள் மற்றும் திருமதி.C.உமையாள், மாவட்ட சமூகநல அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி திருமதி.C.உமையாள், மாவட்ட சமூகநல அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) K.கஜேந்திரன் 11.11.2020. (K.கஜேந்திரன்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் இன்று 17.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 18.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நீலா தெற்கு வீதியிலுள்ள எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் எதிர்புறம் தெற்கு பார்த்த வாசல் உள்ள நாகப்பட்டினம் நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தின் தரைதளத்தில் அமைந்துள்ள நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்தை திரு.K.கஜேந்திரன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நீலா தெற்கு வீதியிலுள்ள எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் எதிர்புறம் தெற்கு பார்த்த வாசல் உள்ள நாகப்பட்டினம் நகராட்சி மகளீர் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தின் தரைதளத்தில் அமைந்துள்ள நாகப்பட்டினம் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூக நல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்கள் பரிந்துரை செய்து கொண்டுவரும் 5 வகை திருமண நிதியுதவி திட்டத்தின் விண்ணப்பங்களை நாகப்பட்டினம் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள் பெற்று ஒப்புதல் வழங்க 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூகநல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்களிடம் திருமதி.உமையாள் அவர்கள் கையூட்டு கேட்டு பெறுவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 17.11.2020 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்களுக்கு 13.00 மணிக்கு தகவல் தெரிவித்தன் பேரில், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 17.00 மணிக்கு வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 17.11.2020 ஆம் தேதி 17.30 மணிக்கு இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு நாகப்பட்டினம் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு 18.00 மணிக்கு வந்து, மேற்படி நாகப்பட்டினம் விஜிலென்ஸ் குழுவினா் சகிதம் நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகமானது நாகப்பட்டினம் நீலா தெற்கு வீதியிலுள்ள எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் எதிர்புறம் தெற்கு பார்த்த வாசல் உள்ள நாகப்பட்டினம் நகராட்சி மகளீர் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தின் தரைதளத்தில் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடம் தரைதளம் மற்றும் முதல்தளத்துடன் அமைந்துள்ளது. முதல் தளத்தில் நகராட்சி மகளீர் மேல்நிலைப்பள்ளியின் ஆங்கிலவழி கல்விக்கான வகுப்பறைகள் உள்ளது. மேற்படி தரைதளத்தில் நுழைவு வாயிலுக்கு முன்புறம் வராண்டாவும், நுழைவுவாயிலை அடுத்து மேற்குபக்கம் அலுவலர்களின் அறையும், அதற்கு எதிரே குடும்ப வன்முறை பாதுகாப்பு அலுவலர் திருமதி.ரமாமகேஸ்வரி அவர்களுடைய இருக்கையும், அலுவலகத்தின் வடமேற்கில் நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவர்களின் அறையும், அதற்கு எதிர்புறம் பதிவேடுகள் அறையும் உள்ளது. அதனை அடுத்து அலுவலகத்தின் வடக்குபக்க மையத்தில் வெளிபுறம் செல்லும் வாசலும் உள்ளது. மேற்படி கட்டிடத்தின் வடக்கு பக்கம் மகளீர் மேல்நிலைப்பள்ளி கட்டிடங்கள் உள்ளது. மேற்படி நாகப்பட்டினம் சமூகநல அலுவலகத்திற்கு எதிர்புறம் கிழக்கு மேற்காக செல்லும் மெயின்ரோடும், அலுவலகத்திற்கு கிழக்கு பக்கம் தேவையார் தெரு செல்லும் சாலையும், அலுவலகத்திற்கு மேற்கு பக்கம் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியும் மற்றும் பல கட்டிடங்களும் உள்ளது. நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் அறையில் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவரது இருக்கையிலும், அவருக்கு எதிரே இளநிலை உதவியாளர் திருமதி.S.கீதா அவர்களும், குடும்ப வன்முறை பாதுகாப்பு அலுவலர் திருமதி.B.ரமாமகேஷ்வரி அவர்களும், அறையின் வாசலில் அலுவலக உதவியாளர் திரு.B.முத்துராஜபாண்டி அவர்களும் இருந்தனர். மேலும் அலுவலர்கள் அறையில் தட்டச்சர் செல்வி.G.வைஷ்ணவி அவர்களும் இருந்தனர். மாவட்ட துணை

ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் மேற்படி மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் மற்றும் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய கீழ்கண்ட தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் |
|---|---|---|
| 1 | திருமதி.C.உமையாள், மாவட்ட சமூகநல அலுவலர் | 410 |
| 2 | திருமதி.B.ரமாமகேஷ்வரி, குடும்ப வன்முறை பாதுகாப்பு அலுவலர் | 40 |
| 3 | திருமதி.S.கீதா, இளநிலை உதவியாளர் | 210 |
| 4 | செல்வி.G.வைஷ்ணவி, தட்டச்சர் | 40 |
| 5 | திரு.B.முத்துராஜபாண்டி, அலுவலக உதவியாளர் | 870 |
| | **மொத்தம்** | **1,570** |

திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவர்களுக்கு சொந்தமான "It's mine" என்று மஞ்சள் நிறத்தில் எழுதப்பட்ட கருப்புகலர் ஹேண்ட் பேக்கில் தனித்தனியாக சுருட்டி சுருட்டி வைக்கப்பட்டிருந்த பணம் 2000 X 6 = 12,000, 500 X 57 = 28,500, 200 X 13 =2,600, 100 X 14 =1,400 மொத்தம் ரூபாய் 44,500/- பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி கேட்டபோது மேற்படி திருமதி.உமையாள் 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூக நல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்கள் ஆகியோர் 5 வகை திருமண நிதியுதவி திட்டத்திற்குரிய விண்ணப்பங்களை ஒப்புதல் செய்ய அவருக்காக கொடுத்த பணத்தை அப்படியே வாங்கி தனித்தனியாக சுருட்டி சுருட்டி வைத்திருப்பதாக சொன்னார். நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.C.உமையாள் அவர்கள் தொலைபேசி மூலம் இன்று 17.11.2020 ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு வரச்சொன்னதன் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு வந்த நாகப்பட்டினம் மாவட்ட 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூக நல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்கள் பரிந்துரை செய்து கொடுத்த 5 வகை திருமண நிதியுதவி திட்டத்தின் விண்ணப்பங்களை நாகப்பட்டினம் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள் பெற்று ஒப்புதல் வழங்க 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூகநல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்களிடம் மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.உமையாள் அவர்கள் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின்

அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ருபாய். 44,500/- மற்றும் திருமதி.C.உமையாள் அவர்களுக்கு சொந்தமான "It's mine" என்று மஞ்சள் நிறத்தில் எழுதப்பட்ட கருப்புகலர் ஹேண்ட் பேக், நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகப் பணியாளர்களின் வருகை பதிவேடு 2020, நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலக ஒப்பந்தப் பணியாளர்களின் வருகை பதிவேடு 2020, மாவட்ட சமூகநல அலுவலக கூட்ட நடவடிக்கை பதிவேடு ஆகிய ஆவணங்கள் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் பிரதி வாரம் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்பவர்களிடம் கையொப்பம் பெறுவதற்கு ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டுவருகிறது. மேற்படி பதிவேட்டினை மாவட்ட சமூகநல அலுவலர் அவர்களே வைத்துக்கொண்டு, வார கூட்டத்திற்கு வருபவர்களிடமும் அவரே கையொப்பம் பெற்றுக்கொள்வார் என்றும், அந்த பதிவேட்டில் இன்றைய தினம் 17.11.20202-ம்தேதி கூட்டத்தில் கலந்து கொண்ட 11 வட்டார ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சமூக நல விரிவாக்க அலுவலர்கள் மற்றும் மகளீர் ஊர்நல அலுவலர்களிடம் மேற்படி திருமதி.உமையாள் அவர்கள் கையொப்பம் பெறாமல் அவர்களை அனுப்பி வைத்துவிட்டார் என்றும் செல்வி.G.வைஷ்ணவி, தட்டச்சர் அவர்கள் தெரிவித்தார். மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்களால் திருமதி.C.உமையாள், மாவட்ட சமூகநல அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரை விசாரணை செய்து தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் இன்று 17.11.2020 ஆம் தேதி இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 18.11.2020 ஆம் தேதி 02.00 மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.05/2020, U/s. 102 Cr.P.C. and U/s. 7 and 7-A of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(M.அருள்பிரியா),
காவல் ஆய்வாளர், 18/11/2020
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர், எதிரி திருமதி.C.உமையாள், மாவட்ட சமூகநல அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

காவல் ஆய்வாளர், 18/11/2020,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்